මුදල් අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office (94)-11-2484500 (94)-11-2484600 (94)-11-2484700

ෆැක්ස් / பெக்ஸ் / Fax (94)-11-2449823

වෙබ් අඩවිය / வெப் சைட் / Website www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No. BD/CBP/01/01/06-2020

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2020.09.03

வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் : 05/2020

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டசபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**வரவுசெலவுத்திட்ட அழைப்பு - 2021**

**2021-2023 நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட வேலைச்சட்டகத்துக்குள் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதினூடாக பொதுமக்களுக்கு உடனடி நன்மைகளை வழங்கும் நோக்கத்துடன் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். குறை வருமானமுடைய குடும்பங்களை வலுவூட்டல், கிராமிய பொருளாதார மேம்பாடு, பொதுமக்களின் வீடமைப்புத் தேவையினைப் பூர்த்தி செய்தல், கல்வி சீர்திருத்தம் மற்றும் திறன் அபிவிருத்தி துறையின் மாற்றத்தை நோக்கிய முன்னேற்றம், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சிறிய மற்றும் நடுத்தர உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் உற்பத்திகளின் விரிவாக்கம், கிராமிய வீதி வலையமைப்பை மேம்படுத்துதல் போன்ற பொதுமக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. மேலும், கிராமிய சமூகத்தின் வாழ்க்கை மற்றும் விவசாய பொருளாதாரத்தை வலுப்படுத்தல் என்பன ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பிரிக்கமுடியாத முன்னுரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்ற வகையில், சகல அமைச்சுக்களும் கிராமிய மற்றும் பிராந்திய அலுவலக சேவைகளை வலுப்படுத்தும் வகையில் தமது நகர்ப்புற மற்றும் கருத்திட்ட பதவியணி மறுசீரமைக்கப்படுவதனை உறுதி செய்தல்வேண்டும். மேலும், 2020 ஆகஸ்ட் 09 திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் அரசாங்கத்தின் தேசிய முன்னுரிமைகள்

தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சகல அமைச்சுக்கள், அவற்றின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நோக்கங்களை அத்தகைய தேசிய முன்னுரிமைகளை உடனடியாக அடைவதற்கு வர்த்தமானியின் மூலம் தங்கள் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட விடயதானங்களுடன் இணங்கும் வகையில் மீளாய்வு செய்வதன் மூலம் 2021 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

03. மேலும், உலகளாவிய தொற்றுநோயாகிய கொவிட்-19 தொற்றினை வெற்றிகரமாக முகாமைசெய்தபோதிலும், அதன் மூலம் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட எதிர்பாரா தாக்கத்தினை முறையாக முகாமைசெய்வதற்கு முன்னுரிமை வழங்கவேண்டியது அவசியமாகும். பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக தற்பொழுது காணப்படும் அரசிறை வாய்ப்புகளை விவேகத்துடன் நிர்வகிப்பதிலும், அரசாங்க செலவினங்களை முழுமையாகக் கட்டுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பின்னணியில், மூலதனச் செலவினங்களுக்கு முன்னுரிமை வழங்குதல், அரசாங்க வருமான சேகரிப்பின் செயற்றிறன் மற்றும் ஆற்றலினை மேம்படுத்துதல், மீண்டெழும் செலவினத்தினைக் குறைத்தல் மற்றும் முறையான நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கினைப் பேணுகின்ற அதேவேளை, தொடர்புடைய பொருளாதார இலக்குகளை அடைவதற்காக 2021 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு கவனம் செலுத்தல் வேண்டும்.

**04. மூலதனச் செலவினம்**

**<u>4. அ. தற்பொழுது செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்</u>**

தற்பொழுது செயற்படுத்தப்படுத்தப்பட்டுவரும் நிகழ்சித்திட்டங்கள்/கருத்திட்டங்கள் புதிய கொள்கை கட்டமைப்பின் இலக்குகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளைத் தயாரித்தல் என்பதன் கீழ் சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட PS/SP/SB/C/22/2019 ஆம் இலக்க 2019.10.03 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 02 இன் வழிகாட்டுதல்களுடன் தொடர்புபடுத்துவதுடன் தேவையான திருத்தங்களைச்செய்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளை விரைவாக மக்களுக்கு வழங்குவதற்காக அக்கருத்திட்டங்களை விரைவாகவும் சரியான தரத்திலும் நிறைவுசெய்வதற்கு 2021 இல் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

மேலும், ஏற்கனவே தொடங்கப்பட்ட மற்றும் பௌதீக முன்னேற்றத்தைக் காட்டாத கருத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கத் தீர்மானிக்கப்படல் வேண்டும். இதற்கமைவாக, அத்தகைய கருத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் 2021 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமா என்பது பற்றி தீர்மானிக்கப்படல் வேண்டும்.

வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளாக அல்லது வெளிநாட்டு நிதி உதவியுடன் தொடங்கப்பட்டு கருத்திட்ட காலம் முடிவடைந்தன் பின்னரும் உள்ளூர் நிதியைப் பயன்படுத்தி சரியான இலக்குகளை அடைய முடியாமல் தொடர்ந்து இடம்பறுருகின்ற கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அதேபோன்று, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட 2020.02.31 ஆந் திகதிய MOFE&PD/ERD/2020/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கருத்திட்ட காலம் முடிவடைந்த பின்னரும் தொடர்கின்ற கருத்திட்ட அலுவலகங்கள் / கிளை அலுவலகங்கள் அல்லது அத்தகைய கருத்திட்டங்களின் பதவியணியினை மேலும் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை ஆராய்ந்து அவற்றைத் தொடர்து முன்னெடுக்க வேண்டியிருப்பின், அதுதொடர்பாக அமைச்சரவையின் விஷேட அனுமதியினைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு விஷேட அனுமதி பெறப்பட்டிராதபோது, கருதிட்ட காலம் முடிவடைந்த கருத்திட்டங்களின் அலுவலகங்கள் / கிளை அலுவலகங்கள் அல்லது அத்தகைய கருத்திட்டங்களின் பதவியணியினை மேலும் தொடர்வதற்கு வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

அதேபோன்று, ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்ட கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட / தொடங்கப்படாத, அர்ப்பணிப்புக் கட்டணம் (commitment fees) செலுத்தப்பட்டுவருகின்ற வெளிநாட்டு கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மீளாய்வுசெய்து, அத்தகைய கருத்திட்டங்களை தொடராவிட்டால், தொடர்புடைய ஒப்பந்தங்களை முறையாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**4. ஆ. புதிய கருத்திட்டங்கள்**

நடைமுறையிலுள்ள வரையறுக்கப்பட்ட அரசிறை வாய்ப்பிற்குள் அமைச்சுகளின் முன்மொழியப்பட்ட அனைத்து புதிய கருத்திட்டங்களுக்கும் முன்னுரிமையின்றி ஒதுக்கீடு செய்வதற்கு முடியாமையினால், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2019.01.10 ஆந் திகதிய MNPEA 02/2019 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைவாக அங்கீகாரம் பெறப்பட்ட மற்றும் முன்னுரிமை வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாத்திரம் தேவையான ஏற்பாடுகளை கோருவதற்கான பொறுப்பை செலவின முகவர்கள் ஏற்க வேண்டும். 2021-2023 வரவுசெலவுத்திட்ட வேலைச் சட்டகத்துக்குள் அரச முதலீட்டு திட்டங்களில் இணைக்கப்படாத மற்றும் மற்றும் முறையான அங்கீகாரம் பெறப்படாத எந்தவொரு திட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்கின்ற அதிகாரம் திறைசேரிக்கு இல்லை.

அதேபோன்று, உரிய அங்கீகாரம் பெறப்பட்ட போதும் இதுவரை ஆரம்பிக்கப்படாத அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களுக்கான வரவுசெலவுத் திட்டக் கோரிக்கையினை சமர்ப்பிக்க முன்னர் புதிய அரசாங்கத்தின் கொள்கை வேலைசட்டகம் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளைத் தயாரித்தல் தொடர்பாக சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட PS/SP/SB/C/22/2019 ஆம் இலக்க 2019.10.03 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 02 இன் வழிகாட்டலுக்கிணங்க தொடர்புடைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை / கருத்திட்டங்களை மீளாய்வுசெய்வதற்கு குறித்த நிரல் அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறித்த மீளாய்வு அறிக்கையினை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும், அவசியமெனின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் சமர்ப்பித்தல்வேண்டும். இதற்கு மேலதிகமாக, ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு ஆனால் இன்னும் ஆரம்பிக்கப்படாத கருத்திட்டங்களையும் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**4. இ. வெளிநாட்டு நிதி மூலம் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள்**

2020.05.13 ஆந் திகதிய 20/0804/204/078 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அதற்கான தீர்மானத்தின்படி நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்குட்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக அக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டதன் பின்னர் அதற்கேற்ப கருத்திட்டத்தினை மீள திட்டமிட்டு அவ்வாறு திருத்தப்பட்ட திட்டங்களுக்கமைய ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**4. ஈ. பொதுவான அறிவுறுத்தல்கள்**

கருத்திட்டக் கண்காணிப்புக்கு, கருத்திட்ட கண்காணிப்பு அலகுகள் (Project Monitoring Units) அவசிமல்ல என்பதுடன், தற்போதுள்ள ஊழியர்களின் மூலம் கருத்திட்டங்களின் பணியினைத் தொடர முடியும். இதற்கமைய, எதிர்கால மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு அமைச்சுக்களின் கருத்திட்டங்களுக்கான செலவினங்களை சேர்க்காதிருத்தலை உறுதிசெய்தல் வேண்டும்.

மேலும், அரச நிறுவனங்களுக்கான புதிய கட்டிடங்களின் நிர்மானப் பணிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், தற்போது நிர்மானப் பணிகள் இறுதி கட்டத்திலுள்ள கட்டிடங்களை நிறைவு செய்வதற்கு பொது திறைசேரிக்கு அறிவித்து அதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

திறன் விருத்தி செலவுத் தலைப்பின் கீழ் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போதும் நிதி ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற போதும் நேரடியாக சேவை பிரமாணக் குறிப்பின் தேவைப்பாட்டிற்கிணங்க கற்கை நெறிகள் மற்றும் அலுவலரின் கடமையுடன் நேரடியாகத் தொடர்புறும் பயிற்சிநெறிகள் மற்றும் பாடநெறிகளுக்கு மட்டும் வரையறுக்கப்படுதல் வேண்டும். சில நிறுவனங்களின் மூலம் சேவை பிரமானக் குறிப்பின் தேவையினை நிவர்த்திசெய்யும் நோக்கத்துடன் நடத்தப்படும் பாடநெறிகளில் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் / கள விஜயங்களை நீக்கிவிட்டு அத்தகைய பாடநெறிகளை மீளவடிவமைக்க நடவடிக்கை எடுப்பதுடன் அதற்கேற்ப மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

தற்பொழுது செயற்படுத்தப்படும் மற்றும் புதிய கருத்திட்டங்கள் தொடர்பான விவரங்களை இணைப்பு 01 படிவத்திலும், நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த விவரங்களை இணைப்பு 02 படிவத்திலும் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆண் பெண் பாலினம் தொடர்பாக திறைசேரி மற்றும் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கிணங்க மதிப்பீடுகளைத் தயாரித்தலை உறுதிசெய்தல் வேண்டும். இது தொடர்பாக தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 02/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**05. மீண்டெழும் செலவினம்**

**5. அ அரசாங்கத்தின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்**

அரசாங்கத்தின் நீண்டகால நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக திரட்டு நிதியத்தின் மூலம் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுகின்றது. இருப்பினும், குறித்த நிவாரணங்கள் பயனாளிகளுக்கு நேரடியாக நன்மையளிக்கின்றனவா என்பது கேள்விக்குரியாகும். எனவே, நன்மைகளைப் பெற வேண்டிய பயனாளிகளை சரியாக அடையாளம் காண வேண்டியது அவசியமாகும். ஒரே பயனாளி பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நன்மைகளைப் பெறுகிறார் என்பது பல தடவைகளில் அவதானிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், மத்திய அரசாங்கத்தின் பல்வேறு

அமைச்சுக்களைப் போன்று மாகாண சபைகளினாலும் வழங்கப்படுகின்ற மானியங்களை இருதடவை பெறுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அதற்காக தகவல் தொழில்நுட்பத்தின் அதிகபட்ச பயன்பாடும் ஊக்குவிக்கப்படுகிறது.

**5. ஆ. அரச நிறுவனங்களுக்கான அரசாங்க பங்களிப்பு**

வருமானமீட்டும் சில அரச நிறுவனங்களுக்காகவும் பொது திறைசேரியானது மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன செலவினங்களுக்கு கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்கின்றது. முறையான முகாமைத்துவ உத்திகளின் மூலம் அவற்றை வினைத்திறன்மிக்க மற்றும் இலாபகரமான நிறுவனங்களாக மாற்றுவது அத்தகைய நிறுவனங்களின் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதேபோன்று, இதுபற்றிய முறையான மேற்பார்வையொன்று உரிய அமைச்சினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், பல அரச நிறுவனங்கள் நிலையான வைப்புகள், திறைசேரி உண்டியல்கள் போன்றவற்றில் கணிசமான தொகையை முதலீடு செய்துள்ளமை தெரியவந்துள்ளது. நிதி நெருக்கடிகளின் போது, தமது நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கான கோரிக்கைகளை திறைசேரிக்கு முன்வைப்பதற்கு முன்னர், அவ்வாறான முதலீடுகளை பயன்படுத்துவதற்கு குறித்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரச நிறுவனங்களுக்கான நிதி ஏற்பாடுகளைக் கோரும்போது ஆள்சார் வேதனாதிகளுக்காக செய்யப்படுகின்ற ஒதுக்கீட்டினை வேறாக இனம் காண்பதற்கு முடியுமான வகையில் செலவினக் குறியீட்டு இல. 1503 இன் கீழ் அரச நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகளுக்கு மாத்திரம் தேவையான ஏற்பாடுகளையும் செலவினக் குறியீட்டு இல. 1509 இன் கீழ் ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்கு தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும்.

**06. பதவியணி தொடர்பான தகவல்**

அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனம் ஒவ்வொன்றினதும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணி பற்றிய விபரம் இணைப்பு 03 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**07. அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு**

அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு மதிப்பீடுகள் இணைப்பு 04 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**08. செலவின மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்**

மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு, முறையாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமை (ITMIS) மூலம் 2020.09.15 அன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்து இணைப்புகளுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் 2021-2023 ஆம் ஆண்டிற்கான நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் 2022-2023 ஆண்டுகளுக்கான எதிர்வுகூறல் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளையும் உள்ளடக்குவது கட்டாயமாகும். இதற்கு மேலதிகமாக, அத்தகைய ஆவணங்களின் வன் பிரதிகளை (hard copies) தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் உரிய பதவிநிலை அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ITMIS முறைமையில்

தரவுகளை உள்ளீடு செய்யும்போது ஏதேனும் உதவி தேவைப்படின், தயவுசெய்து 011-2484999 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக ITMIS helpdesk அலுவலர்களைத் தொடர்பு கொள்ளவும்.

## 09. தெளிவுபடுத்தல்

உங்களுக்கு மேலதிக தெளிவு தேவைப்படின், உங்களது அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் உரிய அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/எஸ். ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்

**இணைப்பு 01**

# <u>வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு - 2021</u>

கருத்திட்ட விபரம் (உள்நாட்டு/வெளிநாட்டு மூலதன/ மீண்டெழும் நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம் தொடர்பில் தனித்தனியாக பூரணப்படுத்தல் வேண்டும்)

அமைச்சின் பெயர் :

திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் :

செலவினத் தலைப்பு இல.: பெயர் :

நிகழ்ச்சித்திட்ட இல. : பெயர் :

கருத்திட்ட இல. : பெயர் :

செயற்படுத்தும் நிறுவனத்தின்பெயர் :

உரிய அங்கீகாரங்கள் தொடர்பான விபரம் :

அமைச்சினால் கருத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதி :

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கருத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதி :

அமைச்சரவையினால் கருத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதி :

விநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டமாயின் அந்நிதி வசதியினை வழங்கும் நாடு அல்லது நிறுவனத்தின் பெயர் :

கருத்திட்ட காலம் :

கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி :

கருத்திட்டம் நிறைவுசெய்யப்படவேண்டிய திகதி :

கருத்திட்டம் நிறைவுசெய்யப்படவேண்டிய திருத்தப்பட்ட திகதி * :

** கருத்திட்ட கால எல்லை நீடிக்கப்பட்டிருப்பின், அதுதொடர்பான அமைச்சரவை அங்கீகாரத்தினை இத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.*

ஏனைய :

மொத்த கருத்திட்ட செலவு : ரூபா மில்.

வெளிநாட்டு நிதியளிப்பு : ரூபா மில்.

உள்நாட்டு நிதியளிப்பு: ரூபா மில்.

கருத்திட்ட அமைவிடம் (சரியான இடத்தைக் குறிப்பிடவும்) :

**அளவிட முடியுமான கருத்திட்ட நோக்கம் (இலக்கு)**

(5 வரிகளில் மாத்திரம் சுருக்கமாக குறிப்புடுக)

**செயற்பாட்டுப் பட்டியல்**

(5 -10 செயற்பாட்டு வரிகளை சுருக்கமாக குறிப்புடுக)

***மறுபக்கம் பார்க்க***

| செலவினம் | | கருத்திட்ட பெறுமதி ரூ.மி. | 2019.12.31 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட வ.செ.தி. ஒதுக்கீடு ரூ.மி. | 2019.12.31 திகதியில் மொத்த செலவினம் ரூ.மி. | 2019.12.31 திகதியில் பௌதிக முன்னேற்றம் (சதவீதமாக எழுத்து மூலம் நிறைவு செய்யப்பட்ட பணிகளை குறிப்பிடுக) | 2020 வருடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூ.மி. | 2020.08.31 திகதியில் செலவினம் ரூ.மி. | அடுத்த 03 வருடங்களில் எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.மி. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 2021 | 2022 | 2023 |
| **மீண்டெழும்** | | | | | | | | | | |
| ஆள் சார் வேதனாதிகள் | ஆலோசகர்களுக்கு | | | | | | | | | |
| | கருத்திட்ட ஊழியர்களுக்கு | | | | | | | | | |
| ஏனைய மீண்டெழும் | | | | | | | | | | |
| **மூலதன** | | | | | | | | | | |
| உள்நாட்டு நிதியளிப்பு | 11 | | | | | | | | | |
| | 17 | | | | | | | | | |
| இணைந்த நிதியளிப்பு | 18 | | | | | | | | | |
| வெளி நாட்டு நிதியளிப்பு | 12 | | | | | | | | | |
| | 13 | | | | | | | | | |
| | 14 | | | | | | | | | |
| | 15 | | | | | | | | | |
| | 16 | | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | | | |

**இணைப்பு 02**

## 2021 வரவுசெலவுத்திட்டத்தில் நி.அ. இலக்குகளை இணைத்துக்கொள்ளல்

அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனம்: ……………………………………………………………………………………..

செலவினத் தலைப்பு இல. : …………………………….………………………

| முன்னுரிமை துறை/பிரிவு [1] | செலவின முகவர் சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் | மிகவும் பொருத்தமான நி.அ. இலக்கு | நி.அ. இ. அடைவு/அடைவுகள் | நி.அ. இ. சுட்டி/சுட்டிகள் | தொடர்புடைய நி.அ.இ. உரிய துறைகள் (2) | 2021 மதிப்பீடு (ரூபா மில்.) | ஏனைய நி.அ.இ. உடனான தொடர்பு (3 ஆம் நிரலில் குறிப்பிட்டது நீங்களாக) |
|---|---|---|---|---|---|---|---|
| உதா: (i) | <u>**தொழிற்பாட்டு (மீண்டெழும்)**</u><br><br><u>**கருத்திட்டம் 1**</u><br>பாடசாலை பாடப்புத்தக விநியோகம்<br>(கல்வி அமைச்சின் கீழ்) | 4 | 4.1 | 4.1.1 | 2 | ………………… | 1,10 |
| உதா: (ii) | <u>**அபிவிருத்தி (மூலதன)**</u><br><br><u>**கருத்திட்டம் 1**</u><br>சிறிய குளங்கள் மற்றும் கால்வாய் புனரமைப்பு<br>(விவசாய அமைச்சின் கீழ்) | 2 | 2.4 | 2.4.1 | 1,2,3 | ………………….. | 6,1 |

**குறிப்பு:**

1. **முன்னுரிமைத் துறை/ பிரிவு - i. மனித வள அபிவிருத்தி ii. கமத்தொழில் iii. கைத்தொழில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா iv. உட்கட்டமைப்பு v. நல்லாட்சி vi. சுற்றாடல் முகாமைத்துவம் vii. சமூகப் பாதுகாப்பு viii. பிராந்திய அபிவிருத்தி**

2. **நி.அ. இலக்குகளுக்குரிய துறைகள் - 1. பொருளாதாரம் 2. சமூக 3. சுற்றாடல் மற்றும் 4. ஆளுகை**

**இணைப்பு 03**

# பதவியணி விபரம்

## பதவியணி விபரம் - 2020.08.31 அன்றுள்ளவாறு (வகுதி அடிப்படையில்)

அமைச்சின் /திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயர் :- ...........................................................................

| பதவியணி விபரம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேதனத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் வ.செ.திட்ட கருத்திட்டம் | சிரேட்ட மட்டம் | | மூன்றாம் மட்டம் | | இரண்டாம் மட்டம் | | ஆரம்ப மட்டம் | | ஏனைய | | மொத்தம் |
| | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட |
| **உதா :-<br>101-1-1** | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx |
| **101-1-2** | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx |
| **101-2-6** | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx |
| | | | | | | | | | | | |
| **நிறுவனம்<br>101-1-3-1-1503 (தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்)** | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx | xx |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

**அமைய/ தற்காலிக/ ஒப்பந்த போன்ற*

**இணைப்பு 04**

**<u>2021 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கான அரசாங்க ஊழியர் முற்பணக் கணக்கு</u>**

1. அமைச்சின் /திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :- .....................................

2. முற்பண "பீ" கணக்கு தலைப்பு இல. :- .....................................................................

3. 2020 ஆகஸ்ட் மாத சம்பள விபரங்களுக்கு அமைவாக:-

   i. பண்டிகை முற்பண உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-...................
   ii. விசேட முற்பண உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-........................
   iii. இடர் கடன் உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை :-...............................
   iv. 2020 ஆகஸ்ட் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட தவணைக் கட்டண தொகை :-............
   v. 2020 ஆகஸ்ட் சம்பளங்களின் செலவினம் (செலவின குறியீட்டு இல 1001 இற்கு அமைவாக):-....................................

4. 2021 வருடத்துக்கான மதிப்பிடப்பட்ட சம்பளம் (செலவின குறியீட்டு இல 1001 இற்கு அமைவாக) :-....................................................

5. 2020 ஆண்டிற்கான அரசாங்க அலுவலர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றுக்கு அமைவாக:-

   i. மொத்தச் செலவினம் (011 கீழ்) :-.......................................
   ii. மொத்தப் பெறுகை (011 கீழ்) :-........................................
   iii. டிசெம்பர் 31 படுகடன் மீதி :-........................................

6. 2021 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரையறைகள் :-

   i. ஆகக் கூடிய செலவின வரையறை (011 கீழ்) :-...............................
   ii. ஆகக் குறைந்த பெறுகை வரையறை (011 கீழ்) :-................................
   iii. ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை :-................................

**திகதி :-.....................** ..............................................

**நிறுவனத் தலைவரின் கையொப்பம்**